# GTA -இற்கு மின்சாரமளிப்போம்

## GTA -இற்கு மின்சாரமளிப்போம்: நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

### GTA -இல் என்ன நடக்கிறது, ஏன்?

கிரேட்டர் டொராண்டோ ஏரியா (GTA) வளர்ச்சியடைகையில், அதற்கு விநியோகிக்கப்படும் மின்சாரமும் தேவைக்கு ஏற்ப இருக்க வேண்டும். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்பகமான, மலிவான மற்றும் நிலைத்தன்மையுடைய மின்சார விநியோகத்தை உறுதி செய்வதே சுயாதீன மின்சார அமைப்பு ஆபரேட்டரின் (Independent Electricity System Operator, IESO) பணியாகும்.

ஒன்டாரியோவில் மின்சார தேவை அடுத்த 25 ஆண்டுகளில் 75 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, புதிய வீட்டுவசதி மேம்பாடுகள், மின்மயமாக்கல் மற்றும் விரிவடையும் தொழில்துறைகள் காரணமாக GTA இந்த வளர்ச்சியை விஞ்சவுள்ளது.

GTA -இன் வளர்ந்து வரும் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, தேவையை முன்னரே அறிந்துகொள்ளவும், அதிக மின்சாரத்தை வழங்குவதற்கான கட்டத்தின் திறனை மதிப்பிடவும் IESO திட்டமிட்டு வருகிறது. இதில் புதிய மின்சார பரிமாற்றக் கம்பிகள், உள்ளூர் விநியோகம் மற்றும் ஆற்றல் செயல்திறன் உள்ளிட்ட விருப்பங்களை ஆராய்வதும் அடங்கும்.

**IESO என்ன செய்கிறது?**

சுயாதீன மின்சார அமைப்பு ஆபரேட்டர் (Independent Electricity System Operator, IESO) ஆனது ஒன்டாரியோவின் மின்சார அமைப்பை இயக்குகிறது, வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணிநேரமும் மின்சார விநியோகத்தையும் தேவையையும் சமநிலையுடன் நிர்வகிக்கிறது.

மின்சார தேவையை முன்னரே அறிவதன் மூலமும், தேவையைப் பூர்த்தி செய்யும் அமைப்பின் திறனை மதிப்பிடுவதன் மூலமும், புதிய உள்கட்டமைப்பு திட்டங்களைத் திட்டமிடுவதன் மூலமும், புதிய மின்சார விநியோக ஆதாரங்களைப் பாதுகாப்பதன் மூலமும் ஒன்டாரியோவின் மின் கட்டம் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

ieso
Connecting Today.
Powering Tomorrow.

மின்சாரத் தேவைகளைப் புரிந்துகொண்டு நிவர்த்தி செய்ய, உள்ளூர் விநியோக நிறுவனங்கள், நகராட்சிகள், பழங்குடி சமூகங்கள் மற்றும் பிற கூட்டாளர்களுடன் நாங்கள் ஒத்துழைப்புடன் ஈடுபட்டு செயல்படுகிறோம்.

## உங்கள் மின்சார அமைப்பு மற்றும் நாங்கள் அதை எவ்வாறு திட்டமிடுகிறோம்

வட அமெரிக்காவின் தூய்மையான மின் கட்டங்களில் ஒன்றான ஒன்டாரியோவின் மின் கட்டம், அணுசக்தி, நீர், இயற்கை எரிவாயு, காற்று மற்றும் சூரிய ஒளி போன்ற பல்வேறு எரிசக்தி ஆதாரங்களால் ஆதரிக்கப்படுகிறது, இது IESO -இன் எரிசக்தி சேமிப்பு திட்டங்களின் வலுவான எரிசக்தி செயல்திறனின் ஆதரவோடு செயல்படுகிறது. ஒன்டாரியோவில், இந்தத் திட்டங்கள் ஆண்டுக்கு இரண்டு மில்லியன் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு போதுமான மின்சாரத்தைச் சேமிக்க வீடுகளுக்கும் வணிகங்களுக்கும் உதவியுள்ளன.

### எதிர்கால திட்டமிடல்

எதிர்கால மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நீண்டகால திட்டமிடலும் புதிய உள்கட்டமைப்பு உருவாக்கமும் தேவை, மேலும் இதற்கு சிறிது காலம் ஆகும்.

இதைச் செய்ய, IESO ஆனது நகராட்சிகள், பழங்குடி குழுக்கள் மற்றும் குடியிருப்பாளர்களை ஈடுபடுத்துவதன் மூலம் பிராந்திய திட்டமிடலில் சமூக ஈடுபாட்டிற்கு முன்னுரிமை அளிக்கிறது, இவ்வாறு செய்வது விழிப்புணர்வை உருவாக்கவும் சமூக விருப்பங்கள் உள்ளிட்ட கருத்துகளைச் சேகரிக்கவும் உதவுகிறது.

### ஒன்டாரியோவின் மின்சார திட்டமிடல் செயல்முறை

ஒவ்வொரு பிராந்தியமும் எதிர்காலத்திற்கு தேவையான போதுமான அளவு மின்சாரம் வைத்திருப்பதை உறுதி செய்யும் வகையில் முழுமையான செயல்முறையை IESO கொண்டுள்ளது.

1. **தேவைகளைப் புரிந்து கொள்ளுதல்:** பிராந்திய எரிசக்தி தேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு திறன்களைப் புரிந்துகொள்ள IESO மற்றவர்களுடன் கலந்தாலோசிக்கிறது.
2. **சாத்தியமான தீர்வுகளை உருவாக்குதல்:** பின்னர் இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கருத்தில் கொள்ளக்கூடிய சாத்தியமான மின்சார உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஆற்றல்-திறன் மேம்பாடுகளை நாங்கள் பகுப்பாய்வு செய்கிறோம்.
3. **பரிந்துரைகளைச் செய்தல்:** இறுதியாக, போதுமான மற்றும் நம்பகமான மின்சார விநியோகம் இருப்பதை உறுதிசெய்யும் பரிந்துரைகளுடன் ஒரு திட்டத்தை நாங்கள் தயார் செய்கிறோம்.

Toronto Hydro, Alectra, Newmarket-Tay Hydro, Elexicon, Oakville Hydro, Burlington Hydro மற்றும் பிற விநியோக நிறுவனங்களால் செய்யப்படும் உள்ளூர் திட்டமிடல் பிராந்திய திட்டமிடல் செயல்முறையில் சேர்க்கப்படவில்லை என்பதை நினைவில் கொள்வது

அவசியம், இதனால் அவர்களின் உள்ளூர் மின்சார நெட்வொர்க்குகள் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

### GTA -இன் மின்சார முன்கணிப்பு

புதிய வீடுகள் மற்றும் வணிக மேம்பாடுகள், வாகனங்களின் மின்மயமாக்கல், வணிகங்களுக்கான போக்குவரத்து மற்றும் வெப்பமாக்கல் மற்றும் விரிவடையும் தொழில்துறைகள் காரணமாக கிரேட்டர் டொராண்டோ பகுதியில் மின்சார தேவை ஒன்டாரியோவின் மற்ற பகுதிகளை விட வேகமாக அதிகரிக்கிறது.

GTA வளர்ச்சியடைகையில், அதற்கு விநியோகிக்கப்படும் மின்சாரமும் தேவைக்கு ஏற்ப இருக்க வேண்டும். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்பகமான, மலிவான மற்றும் நிலைத்தன்மையுடைய மின்சார விநியோகத்தை உறுதி செய்வதே IESO -இன் பணியாகும்.

## பிராந்திய திட்டமிடல் - GTA மின்சாரத் தேவைகளைப் புரிந்துகொள்ளுதல்

பகுதியின் தனித்துவமான நுகர்வு முறைகள் மற்றும் குறிப்பிடத்தக்க வணிக முதலீடுகளைக் கருத்தில் கொண்டு GTA -இல் நம்பகமான மின்சார சேவையை பிராந்திய திட்டமிடல் உறுதி செய்கிறது.

### GTA -இல் உள்ள சவால்கள்

ஒன்டாரியோவின் அதிக மக்கள்தொகை கொண்ட பிராந்தியமாக, மாகாணத்தின் பிற பகுதிகளில் உருவாக்கப்படும் மின்சார விநியோகத்தைப் பெற்றுவரும் GTA மின்சார கட்டத்தில் அதிக தேவையை முன்வைக்கிறது. GTA அடர்த்தியாக கட்டமைக்கப்பட்டிருப்பதால், புதிய பெரிய அளவிலான, நம்பகமான உள்ளூர் உற்பத்தியை உருவாக்குவதற்கான விருப்பங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. மின்சாரத்திற்கான தேவையை அதிகரிக்கும் வகையில் மின்மயமாக்கல், மக்கள் தொகை மற்றும் வணிக முதலீடுகள் போன்றவை பிராந்தியம் முழுவதும் அதிகரிக்கும்போது நம்பகத்தன்மையைப் பராமரிக்க IESO அதற்கேற்ப திட்டமிட வேண்டும்.

GTA -க்குள் உள்ள நான்கு இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் ஜெனரேட்டர்களை நம்பியிருப்பதைக் குறைப்பதன் விளைவுகளையும் எங்கள் திட்டமிடல் ஆராய்கிறது, அவை ஒன்டாரியோவின் மின்சார கட்டத்தின் ஒட்டுமொத்த நம்பகத்தன்மையைப் பராமரிக்க இன்னும் அவசியமானவையாக உள்ளன, குறிப்பாக மாகாணத்தில் மின்சார தேவை உச்சத்தில் இருக்கும்போது அவசியமானவையாக உள்ளன.

### GTA -இன் மின்சாரத் தேவைகளை நிவர்த்தி செய்தல்

IESO ஆனது தற்போது டொராண்டோ, யார்க் பிராந்தியத்தில் உள்ள மின்சார அமைப்பை மதிப்பீடு செய்து வருகிறது, மேலும் விரைவில் மேற்கில் உள்ள பீல் மற்றும் ஹால்டன் பிராந்தியங்களையும் கிழக்கில் உள்ள டர்ஹாம் பிராந்தியத்தையும் மாகாண கட்டம் முழு GTA -ஐ எவ்வாறு ஆதரிக்கிறது என்பதை மையமாகக் கொண்டு பரிசீலிக்கும். இந்தத் திட்டமிடலில் அந்தத் தேவையை பூர்த்தி செய்யும் கட்டத்தின் திறனை மதிப்பிடுவதும் அடங்கும். அதிக மின்சாரத்தை

வழங்க, புதிய பரிமாற்றக் கம்பிகள், சேமிப்பு மற்றும் ஆற்றல்-செயல்திறன் திட்டங்கள் உட்பட அனைத்து விருப்பங்களையும் நாம் ஆராய வேண்டும்.